# ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் – பாரிஸ்

ஸ்தாபிதம் – 1985

Internet மூலம் இந்த விபரங்களைப்பார்க்கலாம்

Website : http://www.templeganesh.fr - Email – srimanicka@yahoo.fr

29 வருடங்கள்

## ஆலய வரலாறு

இலங்கையின் சிகரமான யாழ்ப்பாணத்தில் பொன் பொலிவுறும் அளவெட்டியில் கோவில்கள் கட்டி கும்பாபிஷேகங்கள் செய்த குடும்பத்தில் உதித்த வைத்தியலிங்கம் சந்திரசேகரம் அவர்களால் உருவாக்கப்பட்டதே பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம்

**பங்குனி மாதம் 1983ம் ஆண்டு**

திரு சந்திரசேகரம் அவர்களின் சொந்தச் செலவில், அவர்களின் சகோதரி மகேஸ்வரி கோபாலசாமி அவர்களின் மேற்பார்வையில் யாழ்ப்பாணம் சின்னத்துரை ஆச்சாரியாரால் பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் பஞ்சஉலோகத்தால் செய்யப்பட்டது.

**புரட்டாதி மாதம் 1984ம் ஆண்டு**

சின்னத்துரை தேசபந்து - Director of Leela Group of Companies அவர்களால் மேற்படி சிலை Air - freight மூலம் பாரிஸிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**மாசி மாதம் 4ம் திகதி 1985ம் ஆண்டு**

Maison de l'Inde, Cité International Université மண்டபத்தில் தைப்பூச தினமும் இலங்கையின் சுதந்திர தினமுமான நாள் முதல் வாரம்தோறும் கலை நிகழ்ச்சிகளுடன் பூஜைகள் நடைபெற்று வந்தன.

**1986 - 1988**

Paris 11 இல் ஒரு சிறிய மண்டபத்தில் இரண்டுகாலப் பூஜைகளுடன் எல்லாவிதமான இந்து நிகழ்வுகளும் நடைபெற்று வந்தது. அரசாங்கத் தூதுவர்கள், இந்து சமயத் தலைவர்கள் பலரும் வந்து வழிபட்டமை குறிப்பிடத் தக்கது. வாரந்தோறும் மூன்று நாட்கள் வெள்ளி, சனி, ஞாயிறு அன்னதானம் நடைபெறுகின்றது.

**1992 மே மாதம் முதல்**

தற்போதைய மண்டபத்தில் Dr.சோமாஸ்கந்த குருக்கள் கும்பாபிஷேகம் செய்து இரண்டு நேரப் பூஜைகள் நடைபெற்று மூன்று தினங்கள் வெள்ளி, சனி, ஞாயிறு அன்னதானம் சிறப்பாக நடந்து வருகின்றது.

**1995 மே மாதம் முதல்**

தினசரி மூன்று காலப் பூஜைகளுடன் விஷேடதினங்களில் அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்று வருகின்றன. அன்னதானங்களும் அடியார்களின் உதவிகளுடன் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

**1995 செப்ரம்பர் மாதம் முதல்**

உலகு அறிந்த பிள்ளையார் பால்குடித்த அதிசயம் (Miracle) இக் கோவிலிலும் இடம்பெற்றது. அரசாங்கம் மற்றும் தொலைக்காட்சி, பிரஞ்சுப் பத்திரிகையாளர்களும் கூட நேரில்கண்டு பாரிஸ் பிள்ளையாருக்கு உள்ள மகிமையை உணர்ந்தனர். தொடர்ந்து வழிபாடுகளிலும் பங்கேற்கின்றனர்.

**1995 முதல்**

விநாயகரின் மகிமையை உணர்ந்து தினசரி நித்திய பூசைகள் நடைபெறுவதுடன் வாரத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 3 தினங்களிலும் அன்னதானம் தொடர்ந்து நடைபெறுவதுடன் சூரன்போர், தயிர்முட்டி பூஜை, விஷ்ணு பூஜை, கந்தஷஷ்டி, கேதாரகௌரி விரத நோன்பு அநுட்டித்தல், அதிகாலை திருவெம்பாவை மற்றும் ஏனைய விரதங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1996 - 1998**

முதல் முறையாக ஆவணி விநாயக சதுர்த்தியன்று அலங்கார உற்சவமும், முதன் முறையாக தேர்த்திருவிழாவும் பல்லாயிரக்கணக்கான பக்கதர்களின் அரோகரா கோஷத்துடன் விமரிசையாக நடைபெற்றது.

**1999**

முருகன், வள்ளி, தெய்வானை சிலைகள் திரு.சந்திரசேகரம் அவர்களின் சகோதரி மகேஸ்வரி கோபாலசாமியாலும் அவரது பிள்ளைகளாலும் கும்பகோணம் சாமிமலையில் செய்விக்கப்பட்டதை திருக்கொவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

1999ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ம் நாள் (12.09.1999) 4ம் முறையாகத் தேர் ஊர்வலம் நடைபெற்றது.

**2000**

2வது தேர் முருகன், வள்ளி, தெய்வானைக்கு புதிதாக அமைத்து ஐரோப்பாவில் இரண்டு தேர் இழுத்த பெருமை பெற்றது. கந்தர் ஷஷ்டி திருவிழாவும் முருகன் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறுகிறது.

**2001**

எல்லா இன மக்களும்பங்குபற்றி 15000 பேர் உட்பட என உலக நாட்டுப் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் பிரெஞ்சு நாட்டுப் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் பெருமை கொண்டாடின. தொலைக்காட்சிகள் நேரடி அஞ்சல் செய்தன.

**2002**

21.06.2002 'அருட்பணி அரசு' என்ற விருது சென்னையில் அகோல பீடம் ஜீயர்ஸ்வாமிகளின் திருக்கரங்களால் வழங்கப்பட்டது.

**2003 ஒக்டோபர்**

பஞ்சமுகவிநாயகர்சிலை இலங்கையில் செய்யப்பட்டு 24.8.03ல் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது

ரிஷிகேஸ் சுவாமி சியாம்தாஸ் இங்கு பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்தார்.

ஸ்ரீ இராமபக்த ஆஞ்சநேயர், ஸ்ரீ ஐயப்பசுவாமி, ஸ்ரீ நாகர் ஆகிய மூன்று தெய்வங்களுக்கும் ஆகம முறைப்படி நூதன விக்ரஹ பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**2004 செப்ரெம்பர்**

றெனியோன் நாட்டைச்சேர்ந்த அட்ஜானந்த சுவாமிகளும், இந்தியா ரிஷிகேஷ் கீதாபவன் ஸ்வாக் ஆச்சிரமத்தைச்சேர்ந்த டாக்டர் சியாம்தாஸ்ஜி சுவாமிகளும் பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகராலய 9வது தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டு பக்தர்களை ஆசீர்வதித்துச் சிறப்பித்தனர்.

ஸ்ரீ மாணிக்கவிநாகரின் 9வது தேர்த்திருவிழாவில் இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டதாக பிரான்ஸிலிருந்து வெளிவரும் பரீஸியன் தனது 6.9.2003 நாளிதழில் சிறப்பித்து எழுதியிருந்தது.

**2005 செப்ரெம்பர்**

ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் 10வது தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இந்தியாவிலிருந்து சைவப்பெருந்தகை ஸ்ரீ மதிஒளி சரஸ்வதிஅம்மா அவர்கள் வருகைதந்து பக்தர்களை ஆசீர்வதித்தார்.


le Parisien

Plus de 20 000 personnes à la grande fête hindoue

தேர்த்திருவிழாவில் 25ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டதை La Croix என்ற பிரெஞ்சுப்பத்திரிகை சிறப்பித்து பதிவுசெய்திருந்தது.

**2006 செப்ரெம்பர்**

ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் 11வது தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்றது. 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து சிறப்பித்தனர். இலங்கை,


la Croix

Près de 25 000 personnes ont fêté Ganesha

**2007 செப்ரெம்பர்**

ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் 12வது தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்றது. வழமை போல் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து சிறப்பித்தனர். ஆலய அலங்கரிப்பிற்காக இந்தியாவிலிருந்து விநாயகருக்குரிய பிரமாண்டமான யானைச்சிலை வரவழைக்கப்பட்டது. 12வது தேர்த்திருவிழாவின் போது ஸ்ரீமாணிக்கவிநாயகரின் தேரின்முன்பே இச்சிலையானது அலங்காரஊர்தியாக பவனிவந்தமை தேர்த்திருவிழாவிற்கு ஒரு சிறப்பைக்கொடுத்தது.

**2008 - 2009 செப்ரெம்பர்**

ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் 13வது 14வது தேர்த்திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

**2010**

18.04.2010 ல் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் ஆலயத்தின் புதியமுகவரியில் சிறப்பாக நடபெற்றது. ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் 15வது தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்றது

**2011-2012**

ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் 16வது 17வது

2004 லிருந்து இலங்கையில் அல்லற்படும் மக்களுக்காகவும் பல சமூகஉதவிகளை ஆலயதேவஸ்தானம் வழங்கிவருகிறது.


குறிப்பாக அளவெட்டி ஆரம்ப பாடசாலைகளான சீனன்கலட்டி, சதானந்தா, முதலியார்கோவிலடி ஆரம்ப பாடசாலை, கருவேப்பிலம், காத்திராகோயில் ஆரம்ப பாடசாலை போன்றவற்றிற்கு குடிநீர்வசதி, மின்சாரவசதி, தளபாடவசதி ஆகியவற்றை செய்து கொடுத்துள்ளோம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரிஸிலிருந்து பெரிய கொன்ரெயினர் மூலம் கொண்டு சென்று விதானையார் உதவியுடன் நேரடியாக கொடுத்து உதவியுள்ளோம். அவர்களது வங்கியிலும் சிறியதொகை பணம் நேரடியாக போட்டுஉதவியுள்ளோம்.

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் லண்டன் பரிபாலனசபையினூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயமும் உதவி வருகிறது. குறிப்பாக அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வுதவி நாட்டின் இன்றைய போர்ச்சூழலில் பேருதவியாக இருந்துவருகிறது.

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் தேர் செய்ய பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயம் உதவியமையும் குறிப்பிடத்தக்கது.



**2013**

ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலய ஸ்தாபகர் சைவப்பெருந்தகை அமரர் வை. சந்திரசேகரம் அவர்களின் நினைவாக

**சந்திரசேகரம் சைவத்தமிழ்ச்சங்கம்,**

01.05.2013 அன்று

பாரிஸில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

ஒவ்வொருவாரமும் ஞாயிறு மாலை 4.30 - 6.00 ராகுகாலத்தில் வைரவர் அபிசேகம் நடைபெறும்.

நீத்து பூசணிக்காயில் மிளகுதீபம் ஏற்றினால் விசேடபலன் கிட்டும்

**குறிப்பு :**

வெள்ளெருக்கு விநாயகப்பெருமானுக்கு பூஜை செய்யும்போது அபிஷேகம் கிடையாது. அத்தர், புனுகு, ஜவ்வாது, சந்தனாதித் தைலம் இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தடவி பூஜித்தால் போதுமானது. விரும்பினால் இந்த பூஜை இவ்வாலயத்தில் நேர்முகப் பயிற்சி பெறலாம். பயிற்சிபெற எவ்விதக் கட்டணமும் கிடையாது. இந்தியாவில் பிள்ளையார் பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் வேதாகம வித்தியாலயத்தில் பயிற்சி முடித்த சிவாச்சாரியார்கள் குருக்கள் மூலம் இலவசமாக நேர்முக பயிற்சி அளிக்கப்படும். மேலும் வெளியூர் ஐரோப்பா வெளிநாட்டில் வசித்து வரும் அன்பர்களுக்கும் வெள்ளருக்கு விநாயகரும் பூஜை செய்யும் விபரமும் அனுப்பி வைக்கப்படும்.

**கோயிலில் அபிஷேகம் செய்வதால் பீடைகள் நீங்கும்**
**பொருள் வளம் சிறக்கும் திருஷ்டி தோஷம் விலகும்**

## திருவிளக்கில் தீபம் ஏற்றும் பலன்கள்

ஒரு நெய் தீபம் விளக்குடன் ஏற்றினால் கடன் நிவர்த்தி சௌக்கியமுண்டாகும். ஐந்து விளக்கு வாங்கி நெய் தீபம் ஏற்றினால், குடும்பத்தில் ஒற்றுமையும் கல்யாணம் முதலிய மங்கள காரியங்களும் நஷ்டமான பொருள்களும் கிடைக்கும். செடி விளக்கு வாங்கி அதில் நெய் தீபம் ஏற்றினால் குடும்பத்தில் வியாதிகள் வராமலும் வியாதிகள் நிவர்த்தியாகியும் புத்திரபௌத்திரர்களுக்கு ஷேமங்கள் உண்டாகும்.

சரவிளக்கு வாங்கி நெய் தீபம் ஏற்றினால் ஜென்மாந்திர பாபங்கள் நிவர்த்தியாகி புண்ய பலன்களை அநுபவிப்பார்கள். நெய்யால் விளக்கேற்றினால் நினைத்தது நடைபெறும், நல்லெண்ணெயால் தீபம் ஏற்றினால் ஆரோக்கியமுண்டாகும். இலுப்பெண்ணெயால் தீபம் ஏற்றினால் சகல காரியங்களும் வெற்றி, மறு ஜென்மாவிலும் நன்மை தரும்.

## தானத்தில் சிறந்தது அன்னதானம் செய்வதால் கிடைக்கும் பலன்கள்

பாரிஸில் எங்கள் கோவிலில் வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று தினங்களும் அன்னதானம் தொடர்ந்து கொடுத்து வரப்படுகிறது.

உலகிலுள்ள பலவித தானங்களுள் மிகமிகச் சிறந்தது அன்னதானம். உண்பவர்களுக்குத் திருப்தி கொடுப்பதும் இதுவேயாகும். மனம் குளிர்ந்து இறைவனுக்குப் படைத்து அதை உண்ணுவதால் நோய்கள் குணமாகும். மனக் கவலைகள் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

ஒருவருக்கு பொன்னாகவோ, பணமாகவோ எவ்வளவுதான் அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் தானம் பெறுபவருக்குத் திருப்தியே ஏற்படாது. இன்னும் அதிகமாகக் கொடுக்கமாட்டார்களா? என்றுதான் ஏங்குவார்கள். ஆனால் அதையே உண்ண உணவாகக் கொடுத்தால், வயிறு நிரம்பியவுடன் போதும் என்று கூறி விடுவார்கள். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சாப்பிட வேண்டுமானால், வயிறும் ஏற்றுக் கொள்வதில்லை. போதும் என்று வயிறும் மனதும் திருப்தி அடைந்து விடும். அதனால் தான் தானத்திலேயே சிறந்ததாக அன்னதானம் விளங்கி வருகின்றது.

'தீயதாம் அன்னம் தீயதாம்' என்று மேலும் மேலும் அன்னத்தைக் கொடு என்பார். அதுபோல், இங்கு தன் நேரடிப் பார்வையில் ஒரு தாயின் பரிவுடன் அனைவருக்கும் வழங்குகின்றார்கள். சிரத்தையாகச் செய்தால் அதிகப் பலன்களை அடைவது திண்ணமாகும். உலகை ஆட்டிப் படைக்கின்ற கிரஹமான சனி பகவான் அனுக்கிரகத்தைப் பெறலாம். ஜாதகத்தில் சனீஸ்வரரின் கொடிய பார்வையின் காரணமாகவும், சனி, மகா, தசை, ஏழரைச்சனி, அஷ்டமச் சனி இவையால் ஏற்படும் அசுப பலன்கள் இன்னல்கள் இவற்றிலிருந்து விடுபடலாம்.

எங்களுடன் E-mail கடிதம் மூலம் தொடர்பு கொண்டு நீங்களும் அன்னதானம் கொடுத்து நன்மை பெறலாம்.

## ஹோமங்கள் செய்வதால் ஏற்படும் நன்மைகள்

1. சங்கடஹர சதுர்த்தி தின கணபதி ஹோமம்
   - கஷ்டங்கள், தடைகள் நீங்க.
2. தக்ஷணாமூர்த்தி ஹோமம் - கல்வி, ஞாபகசக்தி பெற
3. குபேர தனாகர்ஷண மகாலெசஷ்மீ ஹோமம்
   - லெட்சுமி அருள்,அஷ்டஐஸ்வர்யங்கள் பெற
4. ஸ்ரீ சுதர்சன ஹோமம் (ஸ்ரீ விஷ்ணுவுக்கு)
   - சத்ருஜெயம், வியாபாரத்தடை நீங்க
5. சூர்ய நமஸ்க்கார,நவக்ரஹ ஹோமம்
   - ஜாதககிரஹதோஷம்நீங்க,கண்வியாதிகள் அகல
6. அதிருத்ரமஹன்யாஸமஹாமித்யுஞ்சயஹோமம் - மிருத்யுபயம் நீங்க, வியாதிகள் அகல, ஆயுள் அபிவிருத்தியடைய
7. ஸ்வயம்வரா பார்வதீ ஹோமம் - தடையின்றித் திருமணம் நடைபெற, புத்ரதோஷம் நீங்கி, மகப்பேறு உண்டாக
8. சந்தான கோபாலகிருஷ்ண ஹோமம்
   - புத்ரதோஷம் நீங்கி குழந்தை பாக்யமுண்டாக
9. மஹாசிவராத்திரி ஹோமம்
   - வியாதிகள் நீங்கி ஆரோக்கியம் பெற
10. ஆவஹந்தி ஹோமம்
   - அன்னம் குறைவில்லாமலிருக்க, உணவுக்குறைகள் நீங்கும்
11. சரஸ்வதி தேவி ஹோமம் - கல்வியில் வளம் பெறுவதற்கு
12. ஸ்ரீசதசண்ட மஹாயக்ஞ ஹோமம் - சகல செல்வங்களும் பெற்று ஆரோக்கியயுத்துடன் வாழ

ஆலயத்தின் புதிய முகவரி : 17, Rue PAJOL - Paris 18 (M°: La Chapelle / Gare du Nord)